
உ

இலிங்க தரிசனம்





அமரர்

# திரு. கந்தர் வைத்தியலிங்கம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

04.05.2005

உ

சிவமயம்



அமரர்

# திரு. கந்தர் வைத்தியலிங்கம்

அவர்களின்

சிவபதப்பேறு குறித்த

# நினைவு மலர்

## 04.05.2005

# சமர்ப்பணம்

உயிரதனைத் தந்து ஊட்டி வளப்படுத்தி - கல்வி

பயில வைத்துப் பாரதனில் பாங்குடனே வாழவைத்த

தயையுடைய தந்தாய், இம்மலரை நின் மலர்ப்பதத்தில்

பயபக்தியுடன் சமர்ப்பித்தோம் பணிந்து.

குடும்பத்தினர்



உ
சிவமயம்



மலர்வு:
*06.08.1918*

உதிர்வு
*04.04.2005*

அமரர்

# அமரர். திரு. கந்தர் வைத்தியலிங்கம்

(ஓய்வு பெற்ற அதிபர்)

## அவர்கள்

திதி வெண்பா

தாரணத்தின் பங்குனியில் தங்குமிரு பத்திரண்டு
சாரும் அபரத் தசமி திதி - சேருகின்ற
திங்கள் திருவோணம் தெய்வநெறி வைத்யலிங்கம்
சங்கரன் தாள் சேர்ந்தான் தவம்.

" செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப்பணிந்து"

# தோத்திரப் பாக்கள்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே

## தேவாரம்

தொண்டரஞ்சு களிறும் மடக்கிச் சுரும்பார் மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யுமிட மென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டை பாயச் சுனை நீல மொட்டலருங் கேதாரமே.

# திருவாசகம்

அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே
பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும்
புழுத்தலைப் புலையனேன் தனக்குச்
செம்மையே ஆய சிவபதம் அளித்த
செல்வமே சிவபெருமானே
இம்மையே உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே

# திருவிசைப்பா

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மன மணிவிளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ் சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே.

# திருப்பல்லாண்டு

சீருந் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக் கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவார் உலகில்
ஊரும் உலகுங் கழற உழறி
உமை மண வாளனுக்கே
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

# திருப்புராணம்

மன்றின் மணி விளக்கெனலாம்
மருவு முகநகை போற்றி
ஒன்றிய மங்கல நாணின் ஒளி போற்றி
உலகும்பர்
சென்று தொழ அருள் சுரக்கும்
சிவகாம சுந்தரிதன்
நின்ற திரு நிலை போற்றி
நிலவு திருவடிகள் போற்றி

# திருப்புகழ்

வசனமிகவேற்றி மறவாதே
மனது துயராற்றி லுழலாதே
இசைபயில் சடாட்ச ரமதாலே
இகபர செளபாக்கி மருள்வாயே
பசுபதிசிவாக்ய முணர்வோனே
பழனிமலைவீற்ற ருளும்வேலா
அசுரர் கிளை வாட்டி மிகவாழ
அமரர்சிறைமீட்ட பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

கோவலூரர் வேளாண் பிரபு பேராயிரவன் வழி வழிவந்த

## அமரர். திரு.க.வைத்தியலிங்கம் ஆசிரியர்

அவர்களின்

# வாழ்வின் வசந்தம்

ஆதியில் யாழ்ப்பாணம் பற்றிய வரலாற்று நூல்களில் யாழ்ப்பாணச் சரித்திரம் யாழ்ப்பாண வைபவ மாலை கைலாய மாலை முதலியனவற்றைக் குறிப்பிடலாம். கைலாயமாலை பாடிய முத்துராசர் அதில் இணுவில் பேராயிரவன் பற்றி பின்வருமாறு,

"........................................................................ நல்விருந்தாய்
கோட்டுமே ழித்துவசன் கோவற்பதி வாசன்
சூட்டு மலர்க்காவிற் றொடை வாசன் - நாட்டமுறு
ஆதிக்க வேளாளன் ஆயுங் கலையனைத்தும்
சாதித்த ரூபா சௌந்தரியன் - ஆதித்தன்
ஆறா யிரங்கதிரோ டொந்த மேனிப்பிரகாசன்
பேரா யிரவனெனும் பேரரசைச் - சீராரும்
கன்னல் செறிவாழை கமுகு புடை சூழ்க்கழனி
துன்னும் இணவிலிற்துலங்க வைத்து........."

எனப் பாடியுள்ளார். அவன் இணுவிலிலிருந்து உயரப்புலம் வரையுள்ள பெருநிலச் சுற்று வட்டார ஊர்களை தனதாட்சியில் வைத்திருந்தான். அவன் காரைக்கால் வேளாளன் காலிங்கராசன் மகள் கமலாலயத்தை, தனது வாழ்க்கைத் துணைவியாக்கி வாழ்ந்தான். சிதம்பர வளவு என்னும் காணியில் ஒரு சிறந்த கோயிலைக் கட்டி அதில் தனது குல தெய்வமாகிய சிவகாமியம்மையைப் பிரதிட்டை செய்து

பூசைகளை ஒழுங்காக; செய்வித்து வழிபட்டு வந்தான். அவன் மரபில் வந்த இராமநாதர், மூத்ததம்பி வேலாயுதர், வைரவநாதர் சிதம்பரநாதர் என்போர் குறிப்பிடத்தக்கவர்கள். அவர்களில் வேலாயுதரின் மகன் முதலித்தம்பி என்பவர். தமது முன்னோர் போல குலதெய்வமான சிவகாமியம்மையின் கோயிலை உரிமையாக்கி, அதை நிர்வகித்து வந்தார். அவர் தமது முதலாவது வாழ்க்கைத் துணைவியார் மூலம் பிறந்த மகனுக்கு வைத்தியலிங்கம் எனப்பெயர் சூட்டினார். சிறுவயதிலேயே தாயை இழந்த வைத்தியலிங்கம் தமது தந்தையாரது இரண்டாந்தார மக்களுடன் சேர்ந்து தமது குலதெய்வமாகிய சிவகாமியம்மையைத் தொழுதலோடு தந்தையாரிடமே ஔவையார் நீதி நூல்களையும் நிகண்டையும் கற்றும், திருவாதவூரடிகள் புராணத்தை வாசித்தும் உரை சொல்லியும் பயின்று கொண்டார். விவசாயஞ் செய்தலே தொழிலாகக் கொண்ட தன்மகன் பருவமடைந்ததும் அவருக்கு இணுவில் விநாசித்தம்பியின் மகள் நாச்சிப்பிள்ளையைத் திருமணஞ் செய்து வைத்தார்.

இருவரது இல்லறப் பயனால் இருவர் ஆண் மக்களும், ஐவர் பெண் மக்களும் உதித்தனர். இவர்களுள் மூத்த மகனே கந்தர் ஆவர். அவர் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வருவாயைப் பெருக்கி வந்தார் அக்காலம் 1903இல் இணுவில் மஞ்சத்தடியில் வாழ்ந்த அருளாளர் சுப்பிரமணியம் என்னும் பெருமஞ்சஞ் செய்த சந்நாசியாரின் திருவாக்குப்படி, மஞ்சத்தடியில் வாழ்ந்த ஆறுமுகம் வேலாயுதரின் மூத்த மகள் ஆனந்திப்பிள்ளையை மணஞ் செய்து இல்லற வாழ்க்கையால், சந்திரசேகரம்பிள்ளை, அபிராமிப்பிள்ளை, சிற்றம்பலம், வைத்தியலிங்கம், ஆச்சியம்மா, கனகசபை, என்னும் பிள்ளைகளைப் பெற்று இனிதாய் வாழ்ந்தார். இவர்களுள் மூன்றாம் மகனே வைத்தியலிங்கம் ஆவார். அரிசி, நெல்லு முதலிய

வியாபாரத்திலும், விவசாயத்திலும் வல்லவரான திரு கந்தரவர்கள் 1930 சித்திரையில் காலமாக, அவரது குடும்பம் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்தது. தமது பிள்ளைகளைப் படிப்பித்து சட்டம்பிமார் ஆக்க வேண்டும் என்ற தமது கணவனது எண்ணத்தை நிலை நாட்டுமாறு, அன்னை ஆனந்திப்பிள்ளை விவசாயம் மூலம் பொருள் சம்பாதித்து யாவரையும் படிப்பித்தார். அமரர் வைத்தியலிங்கம் முதலில் ஐயர் பாடசாலை என்ற கோண்டாவில் இந்து ம. வி இலும் பின்னர் இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையிலும் கற்றுத் தேர்ந்தார் மூத்தமகன் சந்திரசேகரம் பிள்ளை அந்த விவசாயத்துக்கு துணையாக நிற்க அடுத்த மைந்தர் சிற்றம்பலம், வைத்தியலிங்கம், கனகசபை மூவரும் ஆசிரியராயினர்.

வைத்தியலிங்கம் உடுவில் மான்ஸ் பாடசாலையில் ஆசிரியராய்ப் பணிபுரிந்து, பின்பு மான்ஸ் அ. த. க பாடசாலையிலேயே அதிபராய் ஓய்வுறும் வரை சேவையாற்றினார். அவர் தனது வாழ்க்கைத் துணைவியாக, தென்னிணுவை செட்டி வம்சம் தியாகராசா செல்லப்பா நாகமுத்து தம்பதிகளின் மூத்த மகள் பூமணியை ஆக்கிக் கொண்டார். அதன் பயனாக ஸ்ரீஸ்கந்தவரோதயன், ஸ்ரீஇராஜசவரோதயன், இருவருக்கும் தந்தையானார். இரு பிள்ளைகளும் பரராசசேகரப் பிள்ளையார் மீதும் சிவகாமியம்மை மீதும் சாந்தியடி வைரவசுவாமி, கந்தசுவாமியார் மீதும் தளராத பக்தியுடையவராய் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் இருவரும் ஆரம்பக்கல்வியை, இணுவில் சைவப்பிரகாச ம. வி (இந்துக்கல்லூரி) இல் கற்றபின் மேற்படிப்பை முறையே மூத்தமகன் கொக்குவில் இந்துக்கல்லூரியிலும், இளையமகன் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி ஆகியவற்றில் படித்து முன்னேறினார்.


வைத்தியலிங்கம் உபாத்தியாயர் தமது மூத்தமகன் இலங்கை வங்கியில் உத்தியோகமானதும், அவருக்குப் பொருத்தமாக அண்மையில் வாழ்ந்த பொன்னையா சின்னம்மாவின் இளைய புத்திரியான செல்வி ஜெயலட்சுமியினை தேர்ந்து எடுத்தார். பெண்ணின் தந்தையார் மறைந்துவிட அக்குடும்பத்தின் பொறுப்பை ஏற்று நடாத்திய அண்ணா தொழிலக உரிமையாளர் திரு. பொ. நடராசாவும், அவரது தம்பி திரு. பொ. விவேகானந்தனும் தமது சகோதரியின் திருமணத்தை செவ்வனே செய்து நிறைவேற்றினர். இத்திருமண பயனால் கஜாசனா, கஜாசனன், சுவர்ணாசனா என்னும் பிள்ளைகள் உதித்தனர்.

இரண்டாவது மகன் ஸ்ரீஇராஜவரோதயன் அவர்கள் ஜேர்மனி நாட்டில் சென்று உத்தியோகமானதும் அவருக்கு குரும்பசிட்டியைச் சேர்ந்த அன்பர் கதிர்காமத்தம்பி தம்பதியாரின் மகள் செல்வி. காஞ்சனாவை தேர்ந்து எடுத்து மணம் முடித்து வைத்தார். அவர்களின் இல்லறப்பயனினால் அருணன், அச்சுதன், அட்சயன் ஆகிய மூவர் ஆண்பிள்ளைகளாக உதித்து அங்கேயே வாழ்ந்து வருகிறார்கள்.

அதிபராய் ஓய்வு பெற்று வாழ்ந்து வந்த வைத்தியலிங்கம் தமது பேரப்பிள்ளைகளைப் படிப்பிப்பதிலன்றி சுற்றஞ் சூழ எல்லோரிட த்திலும் அன்பாய் நடந்து வந்தார். உள்ளூரில் குடும்பங்களிற் கிடையிலான பிரச்சினைகள், காணித்கராறுகளையும் தீர்த்ததன்றி சுமார் ஐம்பதிற்கு மேற்பட்ட திருமணங்களையும் செய்து நிறைவேற்றினார். இவையன்றி தம்முன்னோர் பண்டு தொட்டு செய்துவித்து வந்த கோயிற்பூசை திருவிழாக்களையும் ஒழுங்காக செய்து வந்தார். பிரதானமாக இணுவில் சிவகாமியம்மன் கோயிலில் தமது தந்தையார் செய்து வந்த மாதப்பிறப்பு பூசையை தவறாது செய்வித்துவந்தார்.

இறுதி வரை உள்ளத்தாலும் உடலாலும் சேவை ஆற்றிய அமரர் வைத்தியலிங்கம் மூப்பினாலும் பிணியாலும் பிணிக்கப்பட்ட போதும் இறைசிந்தனையால் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார். அன்பகலாத மனைவியின் பணிவிடைகளும் மக்கள், மருமக்கள், பேரப் பிள்ளைகளின் பணிவிடைகளும் கண்டு மனப் பூரிப்பால். மகிழ்ந் திருந்தார். சித்தத்தை சிவன் பால் நிறுத்தி உலக பந்த பாசங்களை வென்று தாரண வருஷம் பங்குனித் திங்கள் 04.04.2005 திங்கட்கிழமை (தசமித் திதியில்) காலையில் இறைவனை வணங்கிய வண்ணம் யாரும் எதிர்பாராத வகையில் அன்னை சிவகாமியின் பாதம் அடைந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பணிவோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**



இணுவை ஸ்ரீமான். பொன். அம்பிகைபாகர் பாடியருளியது

# இணுவில் ஸ்ரீபரராஜ சேகரப்பிள்ளையார் புகழ்மாலை

மங்கலம் பொலி வால சிங்க புர வலனிடையில் வைத்'கவி  வீரராக
வன்னியாழ் பாடியே வாங்கிஅர சாண்டநன் வளநாட தற்குவேந்தன்
பொங்குகங் காதாரன் புவனேக வாகுவாம் பூசுரர்களோடு வந்த
புண்ணியன் பொன்னிநா டெண்ணுமதி பதியாய புங்கவர் வணங்குதிலகன்
சிங்கைஆ ரியச்சக் கரவர்த்தி தன்மரபில் ஏகாதசச் சிரமுறையினான்
திங்கள் நிகர் கவிகையான் துங்கமிகு பரராச சேகரத் திகிரி வேந்தன்
பொங்கும் அருள் தங்கவே பூசித்த நாயகா புவிபுகழும் மடவாசலில்
புகர்முகக் கடவுள் நின் மிகு கருணை அடியனேன் புந்தியில் தங்க அருளே.

சகலதன தானியம் சகலசம் பத்துநற் சந்தோஷ மும்சுரபியும்
சத்துருசங் காரமும் புத்திரர் இலாபமும் சர்வவசீ கரவிடயமும்
புகலரிய வித்தையும் சித்தியும் புத்தியும் பொறப்புறு சரீர சுகமும்
போதநிறை ஆயுளும் கல்வியும் செல்வமும் எப்பொழுது
மேதந்து அருளுவாய்
பகலவர் அநந்தகோடி என இலகு திருமேனி பளபளென் றொளியை வீசப்
பைம்பொன் அங் கதம்மத்த கடசமும் வெயிலெழப் பாரஅரை ஞாண்அசையவே
அகிலமுறு கயிலைவரை கனகப் பெருங்கோவில் அழகுகோ புரவாசலில்
அணிசெஞ் சதங்கை ஒலி கல கலென நடனமிடும் ஐங்கரப் பிள்ளையாரே

இணுவில் சின்னத்தம்பி புலவர் அருளியது.

# இணுவில் சிவகாமி அம்மை பதிகம்

பெற்றவணீ யானுனது பிள்ளையுல கோரறிய
அற்றமிலாச் செல்வந்தந் தருளி வளர்த் தன்பு செய்தாய்
இற்றைவரை யுந்தனியே யான் வருந்த வெங்கொளித்தாய்
சிற்றிடைமின் னன்னையே சிவகாம சுந்தரியே

வந்தாயோர் அருமருந்து வாழ்வெனக்குண் டாகவென்று
தந்தாயென் மட்டோ வெம் தலைமுறைமூ வேழுமினி
யுய்ந்ததுவே யுய்ந்ததுவே நாங்களோர் குறையுமில்லேம்
செந்தாம ரைமலர்த்தாட் சிவகாம சுந்தரியே

சங்கந் தழைக்க அருள் செய்யுந்
          தலைவீ எனைப்போ லித்தலத்திற்
பங்கப் படுமா னிடர்க்கருள் செய்
          பரையே யுன்னை நிதம்பாடிப்
பொங்கிச் சிந்தை மிகக்கலங்கிக்
          கவலும் அடியா ரிடர்நீங்கச்
சிங்க மிசையே வருமிணுவைச்
          சிவகாம வல்லியுனக் கடைக்கலமே.

# இணுவில் ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் அருட் சிறப்பு மாலை

அன்னை தந்தை
    இருவருமே உலகமென்று
அன்புடனே சுற்றி வந்து
    கனியும் பெற்றாய்
மன்னுயிர்கள் கற்றுணர்ந்து
    வாழ வென்றே
மலர்க்கையால் பாரத்தை
    எழுதி வைத்தாய்-தன்
பின்னவனாம் குமரனுக்குப்
    பெண்ணைச் சேர்க்க
பெருங்கரியாய் உருவெடுத்துச்
    சென்று சேர்த்தாய்
சின்னவனாம் நம்பியின் மேல்
    கருணை செய்தே
சீரான கல்வி தந்து
    அருளும் தந்தாய்
நின்னடியைப் போற்றி
    அவ்வை பூசை செய்ய
நீள் துதிக்கையால் அவளைக்
    கயிலை சேர்த்தாய்
மன்னன் பரராச சேகரனாம்
    பணிந்து வேண்ட
மாண்புறவே இணுவையிலே
    கோயில் கொண்டாய்
பொன்பொருளும் கல்வி
    செல்வம் புகழும் தந்து
பூதலத்தில் ஏற்றமிகு
    வாழ்வும் தந்தாய்
முன்னவனே உனை என்றும்
    போற்றி வாழ்வோம்-எம்மை
மூஷிகத்தில் ஏறி வந்து
    இரட்சிப்பாயே.

இணுவை
" மாதங்கன்"

# ஆத்ம சாந்திப் பிரார்த்தனை உரை

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும் பெருமையுடைத்து இவ்வுலகு உறங்குவது போலும் சாக்காடு. உறங்கி விழிப்பது போலும் பிறப்பு தோற்றம் என்றுண்டோ அன்றே மறைவும் நிச்சயமாகி விட்டது இதனை ஆய்ந்தறியார் கவலைப்பட்டுக்கொண்டு தானிருப்பர். உலகில் நிகழ்ந்த நிகழ்கின்ற, நிகழ்வன யாவும் நீதியின் பாற்பட்டதே. இந் நீதியின் தன்மையினை அனுபவ வாயிலாகப் பட்டறிந்தும் உய்த்தறிந்தும் கொள்வதேயன்றி யாரும் விளக்கி அறிவதற்கில்லை.

யோகர் சுவாமிகள் கூறியவாறு எல்லாம் எப்பவோ முடிந்த காரியம். ஒரு பொல்லாப்பும் இல்லை எல்லாம் நன்மைக்கே. நன்றுந் தீதும் பிறர் தர வாரா. அவரவர் வினையை அவரவரே அனுபவிக்க வேண்டும் எல்லாம் வகுத்தான் வகுத்த வழியே இயங்கிக் கொண்டிருக் கின்றது.

சித்தாந்தம் எவ்வளவு பேசினும் நம்மிடையே வாழ்ந்து கொண்டிருக்கும் உற்றார், உறவினர், பெரியோர் இழப்பு ஏற்படும் போது தாக்கம் ஏற்படத்தான் செய்கிறது. இந்த வகையில் ஆசிரியர் திரு.க. வைத்தியலிங்கம் அவர்கள் தான் செய்த தொழிலாகிய ஆசிரியத் தொழிலையே தெய்வமாகக் கருதி பணியாற்றி இருக்கின்றார். எல்லோரிடமும் அன்பாக சிரித்தபடியே கதைக்கின்ற சுபாவம் கொண்டவர். மற்றவர்கள் நன்கு வாழ சிறந்த அறிவுரைகள் வழங்கி தேவையான போது கண்டித்தும் பிழைகளைச் சுட்டிக்காட்டியும் மற்றவர்கள் மனம் நோகாது பேசுகின்ற ஆற்றலையும் கொண்டவர். இவர் பிரிவு தாங்க முடியாத வேதனையைத் தருகின்றது

இயற்கையை நோவதை விட்டு அன்னார் தம் ஆத்மா சாந்திக்கு பிரார்த்திப்பதோடு அவர்தம் குடும்பத்திலுள்ள யாவர் நலனும் வேண்டிப் பிரார்த்திப்போமாக.

இன்ன வினை இன்ன தவத்தின்னதனால் இன்ன பொழுது
இன்னபடியாய்ப் பொருந்தும் என்றாய்ந்து - அன்னதனை
அன்னதவத்து அன்னதனால் அன்ன பொழுது
பின்னமறக் கூட்டும் பிரான்.

**சிவஸ்ரீ.வை. சோமாஸ்கந்தக் குருக்கள்**
**இணுவில் பரராஜசேகரப்பிள்ளையார்,**
**தேவஸ்தானம்.**

# பிரார்த்தனை உரை

இணுவில் பதியினிலே எல்லா மக்களாலும் அன்புடனும் ஆதரவுடனும் வாத்தியார் என்று போற்றப்பட்டு வந்த உயர் திரு. வைத்திலியங்கம் உபாத்தியாயர் அவர்கள் மறைவு எல்லோரையும் திடுக்கிட வைத்தது. தன் வாழ் நாளில் பரராசசேகரப் பிள்ளையாரைத் தினமும் வழிபட்டும் ஒவ்வொரு மாதப்பிறப்பிலும் அன்னை சிவகாமி அம்பிகையை வழிபட்டு வருபவர் எந்நேரமும் புன்முறுவலுடன் இருப்பவர். எமது ஆலய முன்றலில் அமைந்துள்ள " சிதம்பரநாதன் ஞாபகார்த்த" இல்ல திறப்பு விழாவிலே மங்கள விளக்கேற்றி வைத்த பெருந்தகை மறைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். அன்னாரின் ஆத்மா அன்னையின் அடியினைச் சேரப் பிரார்த்திக்கின்றேன்.

சுபம்

**இணுவில் சிவகாமி அம்மன் தேவஸ்தானம்.**

**இங்ஙனம்**
**சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள்.**

## பொன் மொழிகள்

*தேவைக்கு போதுமான செல்வம் உன்னைச் சுமக்கும்.*
*தேவைக்கு அதிகமான செல்வம் உனக்கு சுமையாகும்.*
*நீ உன் வாழ்க்கையில் முன்னேற வேண்டுமானால்*
*உன்னுடைய கால்களால் நடந்து போ; மற்றவர்களின்*
*முதுகில் ஏறிப் போக விரும்பாதே அது உனக்கு ஆபத்து.*
*யாருடைய நம்பிக்கையையும் குலைக்க முயலாதே.*

# பெறுக சாந்தி

இணுவில் மஞ்சத்தடியில் கந்தர் ஆனந்தியார் தம்பதி களுக்குப் புதல்வராகப் பிறந்து பெருமையுடனும் அடக்கமாகவும் வாழ்ந்தவர்.இணுவை முருகப் பெருமானை அனுதினமும் வழிபட்டு வந்த முருக பக்தர் முன்னாள் ஆசிரியரும் அதிபருமான அமரர் வைத்திலியங்கம் அவர்கள்.

நெற்றியில் திருவெண்ணீறும் சந்தனப் பொட்டுமாக தூய்மையின் சின்னமும் தமிழ்ப் பண்பாட்டின் சின்னமுமான வேட்டி,உத்தரியம் மேலங்கி அணிந்து காணப்படும் அமரர் வைத்தியலிங்கம் பண்பும் பணிவும் கடவுள் பக்தியும் கல்வியூக்கமும் மிக்க ஒரு மாணவர் பரம்பரை இணுவில் கிராமத்தில் மட்டுமன்றி தாம் கல்விப் பணிபுரிந்த உடுவில் போன்ற அயற் கிராமங்களிலும் உருவாக்கிடத் தம் வாழ் நாட்களை அர்ப்பணித்த பெரியாராவார். இரு புதல்வர்களையும் இங்கிதம் வாய்ந்த மனைவியையும் கொண்ட அளவான குடும்பம் ஊர் போற்றும் நிலையில் இறைவனுக்கு வாழ்வில் முதன்மை கொடுத்து வாழும் வண்ணம் வழிகாட்டியாகவும் சிறந்த முன் மாதிரிக் கல்விமானாகவும் வாழ்ந்து அமரத்துவம் அடைந்து விட்ட திரு. வைத்தியலிங்கத்தின் மறைவு இணுவிலுக்குப் பெரும் இழப்பாகும் . அவர்தம் குடும்பத்தவரதும், மாணவப் பரம்பரையினரதும், மனங்கள் சாந்தி பெறவும் அமரரின் ஆன்மா மோட்சகதி பெறவும் நொச்சி ஒல்லை முருகனைப் பிரார்த்திக்கின்றோம்.

**கந்தசுவாமி கோவில்**
**இணுவில்.**

**தேவஸ்தான பிரதம குரு**
***சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்திக் குருக்கள்.***

# பிரார்த்தனை.

அமரர் கந்தர் வைத்தியலிங்க உபாத்தியாயர் பணி தனிச்சிறப்பு வாய்ந்தது. அமரர் அவர்கள் இணுவையூரைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்டு ஆசிரியராய், அதிபராய் இறுதிக்காலம் வரை உபாத்தியாயர் என்று எல்லோரும் போற்றும் உத்தம சீலராய் வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து பலருக்கு வாழ வழிகாட்டி மெய்யறிவை ஊட்டி மேலோங்கச் செய்த வித்தகர். சிரித்த முகம் தூய வெண்சால்வை, மிடுக்கான தோற்றத்தோடு அரசோலை விநாயகரையும், மஞ்சத்தடி முருகனையும் வழிபாடாற்றிச் செல்லும் வேளை துடுக்காக அவரது வாயால் வரும் சொற்கள் இன்றும் மெய் மறக்கச் செய்யும். வருடந்தோறும் மஞ்சத்தடி விவேகானந்தா சனசமூக நிலையத்தில் நடைபெறும் வித்தியாரம்ப நிகழ்வில் கலந்து இவரால் வித்தியாரம்பம் செய்து வைத்த பலர் இன்று உலகின் பலபாகங்களிலும் சிறந்த பதவி வகிக்கின்றனர். அன்னார் மனைவி, இருமக்கள், பேரப்பிள்ளைகள் சகிதம் மஞ்சத்தடி முருகன் ஆலய வருடாந்த உற்சவத் திருவிழாவை வெகுசிறப்பாகச் செய்து வந்த நிகழ்வு என்றும் எம் மனதை விட்டகலாது. அன்னாரது இருபுதல்வர்களும் அன்னார் விட்டுச் சென்ற பணியை சிறப்புடன் தொடர எல்லாம் வல்ல அரசோலை விநாயகரையும், மஞ்சத்தடி முருகனையும் இறைஞ்சி அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எம்பெருமானின் பாதார விந்தங்களைப் பிராத்திக்கின்றேன்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**மஞ்சத்தடி அருணகிரிநாத**
**சிவசுப்பிரமணியர் ஆலயம்,**
**அரசோலை விநாயகர் ஆலயம்.**

**இங்ஙனம்**
**பிரம்மஸ்ரீ ம. கிருஷ்ணமூர்த்திஐயர்**
**பிரதம குரு.**

# பிறையாளன் திருவடிக்கீழ் வாழ்வார் சாந்தி

**திதிவெண்பா.**

தாரணத்தின் பங்குனியில் தங்குமிரு பத்திரண்டு
சாரும் அபரத் தசமிதிதி - சேருகின்ற
திங்கள் திருவோணம் தெய்வநெறி வைத்தியலிங்கம்
சங்கரன்தாள் சேர்ந்தான் தவம்.

வண்ணமிகும் இணுவிலூர் கந்தர் என்னும்
மாண்பினரின் மகனாகி வந்துதித்த
புண்ணியனாம் வைத்தியலிங்கம் கலைகள் ஓங்கிப்
புனிதமிகும் ஆசிரிய சேவையாற்றி
பெண்ணினியாள் பூமணியை வதுவைசெய்து
புகழ் பூத்த இரண்டாண்கள் தம்மைப் பெற்று
விண்ணவரும் மதிக்கின்ற வாழ்வு பூண்டு
விண்ணகமே போய்ப் புகுந்து சாந்தி பெற்றார்

திருவோங்கு சைவநெறி வழுவாச் சீலன்
செகவாழ்வில் சைவநெறி காக்கும் பண்பன்
கருவான கலைகளைநன் குணர்ந்து கற்றுக்
கற்றபடி ஒழுகிமக்கள் நலம்பாராட்டத்
தருவாகி நீதிசம ரசம் நல்வார்த்தை
தாங்குகொடை சமயப்பணி யனைத்துமாற்றிப்
பெருவாழ்வு பெற்றான் அன்னாரின் ஆன்மா
பிறையாளன் திருவடிக்கீழ் வாழ்வார் சாந்தி

**அருட்கவி. சீ. விநானசித்தம்பி** M.A
**ஸ்ரீ நாகவரத நாராயணர் தேவஸ்தானம்**
**நாகேஸ்வரம்**
**அளவெட்டி.**

உ
அன்பே சிவம்

# வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த வைத்தியலிங்கம்

காவியுடுத்ததில்லை களவான வேடமில்லை.
பாவியுலகங் கண்டு பயமேதும் கொள்ளவில்லை
தாவி யுலகோர்க்குத் தக்க உதவி செய்தார்
தோல்விகளுங் கண்டார் துவளாத மனங் கொண்டார்
தோளோடு தோள் நின்று துணிந்து கருமஞ் செய்தார்
ஆத்மீக வழிதனிலே இல்லறத்தை நடாத்தி வந்தார்
சாத்வீக மாகத்தரணியிலே நடந்து கொண்டார்
உறவுமில்லை பகையுமில்லை கட்டிய மனைவியையும்
கதறியழும் பேரரையும் துச்சமென மதித்தார்
போதம் மிகக் கொண்டார் புண்ணியனார் சேவடியாம்
பாதந்தலைக் கொண்டு பற்றறுத்தார் வைத்தியலிங்கம்
வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த அவர்
வானுறையுந் தெய்வத்துள் இணைந்தார் இனிதே
அவர் ஆத்மா சாந்தி பெறுக இறை நிலையில்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

க.இரத்தினபூபாலன் ஆசிரியர்
(பெரியண்ணை)
இணுவில்.

# பண்பால் உயர்ந்த ஆசிரியர்

அமரர் இளைப்பாறிய ஆசிரியர் க. வைத்தியலிங்கம் அவர்கள் இவ்வுலகை விட்டு விண்ணுலகம் சென்றுவிட்டார் என்ற செய்திகேட்டு அதிர்ச்சியடைந்தவர்களில் நானும் ஒருவன். கண்டிப்பான ஆசிரியர் என்ற வகையில் ஒழுக்கம் மிக்க மாணவர் களை உருவாக்கிய அமரர் வைத்தியலிங்கம் அவர்கள் ஏனையோரை எவ்வாறு மதிக்கவேண்டும் என்பதை எனக்குக் கற்றுத்தந்தவர். அவரிடம் கல்வி கற்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கா விட்டாலும், உறவினரும் அயலவரும் என்ற வகையில் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பல சந்தர்ப்பங்களில் அவரது உயர்ந்த பண்பை அவதானிக்கும் வாய்ப்புக் கிடைத்தமையே அவரின் உயர் குணங்களை எடைபோட வைத்தது.

அமரர் வைத்தியலிங்கம் அவர்கள் ஒரு ஆசிரியராக மட்டும் சமூகத்துக்கு பணியாற்றவில்லை. சமூகத்தில் எதனைச் செய்ய வேண்டும், எதனைச் செய்யக்கூடாதென்பதை ஆணித்தரமாக எடுத்துக்கூறும் ஆளுமை மிக்கவர். அவர் சில கருமங்களை நிறைவேற்றுவதில் தனக்கென்றே ஒரு தனித் தலைமைத்துவப் பண்பை உருவாக்கிக் கொள்வார். அச்சந்தர்ப்பத்தில் எல்லாம் ஏனையோர் அவர் இடும் கட்டளைக்கு கீழ்ப்படிய ஆயத்தமாக இருப்பதைக் கண்டு நானே வியந்திருக்கின்றேன்.

"தக்கார் தகவிலர் என்பது அவரது எச்சத்தால் காணப்படும்" என்ற பொய்யாமொழிப் புலவரின் கூற்றுக்கு இணங்க அவரது இரு புதல்வர்களின் பெருமை அவரது தகைமையை எடுத்துக் காட்டுகின்றது. அவரது பிள்ளைகளை அவையத்தில் முந்தியிருக்கச் செய்ததன் மூலம் சிறந்ததொரு தந்தையாக வாழ்ந்த அமரரின் பெருமையை என்றும் நினைவுகூருவது எமது கடமையாகும்" "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற குறளுக்கு ஏற்ப எங்கள் பேரன்புக்குரிய அமரர் வைத்தியலிங்கம் அவர்கள் தெய்வமாக மாறி எங்களைச் சொர்க்கத்திலிருந்து ஆசீர்வதிக்க வேண்டுமென எல்லாம் வல்ல பரராஜசேகர விநாயகனை இறைஞ்சுகின்றேன் அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

**அன்பன்**
**க.தேவராஜா**
**தலைவர்,**
**வணிகத்துறை,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

நீ எந்த அளவிற்கு இறைவனை நாடுகிறாயோ அந்த அளவிற்கு உன் பலவீனங்கள் உன்னை விட்டு நீங்கிப் போகும். நீ செய்ய வேண்டியதை முழுமனதோடு செய்து விட்டுப் பயனை இறைவனிடம் விட்டுவிடு.

யாரேனும் குறைகூறினால் அது உண்மையாக இருந்தால் உன்னைத் திருத்திக்கொள். பொய்யாக இருந்தால் சிரித்துப் பொருட்படுத்தாமல் விட்டுவிடு.

### ஸ்கந்தவரோதயாக் கல்லூரி அதிபர் க. சிவாஜி அவர்கள் வழங்கிய

# அஞ்சலி உரை

அன்பும், பண்பும் நிறைந்த ஆசிரியப் பெருந்தகை ஸ்ரீமான் வைத்திலிங்க உபாத்தியாயர் அவர்களின் பிரிவுத்துயர் என்னை வாட்டு கிறது. எனது தந்தையாரின் இனிய நண்பர்களில் ஒருவராகிய அமரர் அவர்கள் நீண்ட காலமாக எமது குடும்பத்தோடு மிகுந்த நட்புக் கொண்டு விளங்கினார்கள். ஒரே கிணற்றடியில் கமம் செய்து ஒன்றாக தேநீர், உணவு பரிமாறி வரம்பிலிருந்துகூட வாழும் முறை சொன்ன வாத்தியாரை மறக்கமுடியவில்லை. எனது தந்தையும் அமரர் அவர்களும் தலைமை ஆசிரியர்களாக விளங்கித் தமிழ் பண்பாட்டு உடைகளோடு உலாவியவர்கள். அமரரைக் காணும் போதெல்லாம் இறந்து போன தந்தையின் நினைவு மீள நினைக்கிறது. தெய்வ பக்தியும் செழிப்பும் மிக்க இப்பெருமகனாரின் இரு புதல்வர்களும் இன்று சீரிய வாழ்வு வாழ்கின்றார்கள். சுன்னாகம், இலங்கை வங்கியின், உயர் அதிகாரியாகப் பணியாற்றும் தலை மைந்தன் திரு. ஸ்ரீஸ்கந்தவரோதயன் பாடசாலை அதிபர்கள், மூத்தோர்களிற்குக் கொடுக்கும் உயர் மதிப்பைப் பாராட்டாதவர்கள் இல்லை. எங்கள் கல்லூரி இசையாசிரியர் சிற்றம்பலம் சிவஞானராஜா அவர்களும் அமரரின் பெறாமகன் ஏதோ ஒரு வகையில் இக்குடும்பத்தவர்களின் தொடர்பு எம்மோடு நிலைபெற்றுள்ளது. நிறைந்த வாழ்வு வாழ்ந்து அமரநிலை பெற்ற வைத்தியலிங்கத்தை வணங்கி பிரார்த்தித்து அமைகின்றேன்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**யா/ஸ்கந்தவரோதயக்கல்லூரி**
**சுன்னாகம்.**
**2005-04-18**

**அதிபர்,**
**க. சிவாஜி**

## செஞ்சொற்செல்வர் திரு. ஆறுதிருமுருகனின்

# பிரார்த்தனையுரை

இணுவில் கிராமத்தின் மூத்த ஆசிரியர் பரம்பரையில் அடியொற்றி வாழ்ந்த வைத்தியலிங்க உபாத்தியாயர் இவ்வுலக வாழ்வை நீத்துவிட்டார். வெள்ளை வெளீரென்ற வேட்டி முழங்கால்களைத் தாண்டிய நாஷனல், திராவிடர் கருமேனி, திருநீற்றுப் பொடி, வேகநடை, எதற்கும் அஞ்சாத தனித்துவ ஆளுமை இவைகள் வைத்தியலிங்க வாத்தியாரின் அடையாளங்கள். நான் சிறுபராயம் முதல் இவரை நன்கு அறிவேன். எனது பள்ளிப் பருவத்தில் பஸ்ஸுக்காக மருதனார்மட சந்தியில் காத்து நிற்பேன். இப்பெருமகனார் வேக நடையில் உடுவில் மான்ஸ் பாடசாலையை நோக்கி நடந்து செல்வார். இவரது மடிப்புக் குலையாத சால்வை இவரது நடையின் வேகத்தை ஆமோதித்த வண்ணம் இவரை எமக்கு அடையாளம் காட்டும். எமது ஊரில் நடைபெறும் இன்ப துன்ப நிகழ்ச்சிகளின் போது இவரைக் கண்டதும் எல்லோரும் எழுந்து மரியாதை செய்வர். எல்லோர் வீடுகளிலும் தலைமைத்துவத்துடன் உரத்த குரலில் சரி பிழை சொல்லுவார். ஆசிரியர்கள் கிராமத்தின் நீதிபதிகளாக விளங்கினார்கள் என்பதை இவர்களைப் போன்ற சிலர் நிரூபித்துக் கொண்டி ருந்தார்கள்.

நான் இவரை இறுதியாக சந்தித்தது இணுவில் சிவகாமி அம்மன் கோவில் வீதியிலமைந்த அமரர் சட்டத்தரணி சிதம்பரநாதன் நினைவு மண்டபத் திறப்பு விழாவில் வைத்தியலிங்க உபாத்தியாயர் தம்பதிகளாக மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தனர். அன்றும் கம்பீரமாகவே காட்சி தந்தார். இவ்வளவு விரைவில் எம்மை விட்டுச் செல்வார் என யான் எதிர்பார்க்கவில்லை. இவரது மைந்தன் சகோதரன் ஸ்ரீஸ்கந்தவரோதயன் என்மீது உயர்ந்த மதிப்புக் கொண்டவர்.

லண்டனில் நடைபெற்ற உலக இந்து மாநாட்டில் முதன் முதலாக யான் பங்கு பற்றி திரும்பிய வேளை இணுவிலில் திருவிழா எடுத்து என்னைக் கௌரவித்ததில் மூலகாரணமாக விளங்கியவர் ஸ்ரீ அண்ணர் ஆவார்.

இவர்களது சிறப்பிற்கு வித்திட்டவர் வைத்தியலிங்க உபாத்தியாயர். இவரது பிரிவுச் செய்தி அறிந்து இங்கிலாந்தில் வாழும் சிற்றம்பல வாத்தியாரின் மருகர் திரு பாலயோகன் அவர்கள் தொலைபேசியில் அழுதழுது தனது துயரை எனக்கெடுத்துரைத்தார். பலரது உள்ளத்தைத் தொட்ட உத்தமராகிய உபாத்தியாயரின் ஆத்மா சிவகாமி அம்பாளின் திருவடி நிழலில் என்றும் ஆறுதல் பெற பிரார்த்தனை செய்து அமைகின்றேன்.

**செஞ்சொற் செல்வர் திரு. ஆறு. திருமுருகன்,**
**(உப அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி)**

- மனிதனுக்குள் ஏற்கனவே புதைந்திருக்கும் பரிபூரண தன்மையை வெளிப்படுத்துவது தான் கல்வி.
- முதலில் கீழ்ப்படிதற்குக் கற்றுக்கொள். பிறகு கட்டளையிடும் பதவி உனக்குத் தானாகவே வந்து சேரும்.
- பிரமச்சரியத்தை உறுதியாக அனுஷ்டிக்கிற ஒரே ஒரு காரணத்தாலேயே, எல்லாவிதமான கல்வி அறிவையும் மிகக் குறுகிய காலத்தில் கற்றுத் தேர்ச்சி பெற்றுவிட முடியும்.

# வைத்தியலிங்கச் சட்டம்பியார் ஒரு சரித்திரம்
# ஆசிரிய தீபம் ஒன்று அணைந்தது

அமரர் உயர்திரு. கந்தர் வைத்தியலிங்கச் சட்டம்பியார் காலத்து மாணவர்களின் கல்வி நிலை மகத்துவங்கள் முன்மாதிரிகள் பலவற்றைக் கொண்டதாகும். மாணவர்கள் தமது குருவைப் பெரிதும் மதித்துப் போற்றி வணங்கிய காலம் அது வைத்தியலிங்கச் சட்டம்பியார் போன்ற கல்வியாளர்களும் மாணவர்களது உயர்ச்சியே தமது வாழ்வின் உயர்ச்சி எனக்கருதி வாழ்ந்தனர். அந்தக் காலத்தில் மாணவர்கள் பிரத்தியேகக் கல்வியை நாடியதில்லை. ஆசிரியர்களது பாடபோதனையே அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது. ஒரு வகுப்பின் பாடபோதனை முடிவில் மாணவர்களைப் பார்த்து வைத்தியலிங்கச் சட்டம்பியார் போன்றவர்கள் "எல்லாம் பூரணமாக விளங்கிச்சுதோ" என்று கேட்பதுண்டு. ஐயந்திரிபறக் கல்வி போதனை நடைபெறுவதில் ஆசிரியர்கள் அதிக அக்கறையாக இருந்தனர். ஒரு மாணவன் பாடசாலைக்கு வராது விடின் அந்த மாணவனின் இல்லம் நோக்கிச் சென்று என்ன ஏது என்று விசாரிப்பதும் அன்றைய ஆசிரியர்களது பண்பாக இருந்தது. அமரரது வாழ்வும் அத்தகைய ஒரு சரித்திரம். அது இன்று மறைந்துவிட்டது.

அன்றெல்லாம் நவராத்திரி காலத்தில் மாணவர்களை ஆசிரியர்கள் வீடுவீடாக அழைத்துச் செல்வர். நவராத்திரிப் பாடல்களைப் பாடி மாணவர்கள் காசு சேர்ப்பதுண்டு. பெற்றோர்கள் கொடுத்துதவும் ஒரு ரூபா, இரண்டு ரூபா நிதியைக் கொண்டு கல்விக் கூடங்களைப் பேணிய காலமும் இன்றில்லை. இத்தகைய சரித்திர நாயகர்களுள் அமரரும் ஒருவர்.

**கூட்டுறவாளர்**

வைத்தியலிங்கச் சட்டம்பியார் மிகச்சிறந்த ஒரு கூட்டுற வாளராக விளங்கியவர். அவர் கூட்டுறவுத் துறைக்கு ஆற்றிய மகத்தான பணியை யான் நன்கு அறிவேன். இவரைப் போன்றவர்களது தன்நலமற்ற பணியால் தான் கூட்டுறவுத்துறை யாழ் மண்ணில் சிறந்தோங்கியது எனலாம்.

**சைவப்பெருமகன்**

அமரர் அவர்களை நல்லதோர் சைவப் பெருமகனாக என்றும் யான் அவதானித்ததுண்டு. நெற்றி நிறைய விபூதியை அள்ளிப் பூசும் மாண்பு அவரின் தனித்துவங்களில் ஒன்றாகும். தூய சந்தனப் பொட்டையும் நெற்றியில் இட்டுக் கொள்வார்.

**பன்முகப் பார்வையில்**

வைத்தியலிங்கச் சட்டம்பியார் அவர்களைப் பல கோணங் களில் யான் பார்த்திருக்கிறேன். அவர் சிறந்த ஒரு கமக்காரன். அத்துடன் எதற்கும் அஞ்சாத வாழ்வு வாழ்ந்த சிறப்பும் அவருக்குரியது.

**நெட்டிலைப்பாய் கோவிற் பற்று**

கோண்டாவில் நெட்டிலைப் பாய் பிள்ளையார் கோவிற்பற்று மஞ்சத் தடியையும் உள்ளடக்கியது. அமரரின் தமையனார் முதுபெரும் புலவர் கலா பூஷணம் வை. க. சிற்றம்பலம் அவர்கள் இன்று கூட நெட்டிலைப் பாயானை வந்து வணங்கிச் செல்பவர். திருவாசக முற்றோதல் நிகழ்வுகளில் கடந்த சில வருடங்களாகப் பங்கு பற்றுபவர். தமையன் வழியில் தம்பியும் ஒரு கல்விமானே. அந்த வகையில் வைத்தியலிங்கச் சட்டம்பியார் அவர்களது மறைவு கோண்டாவில் மக்களுக்கும் ஒரு பேரிழப்பாகும்.

சுருங்கச் சொல்வதானால் எம்மிடையே வாழ்ந்த ஓர் ஆசிரிய தீபம் அணைந்து விட்டது.

எல்லாம் வல்ல திருவருள்மிகு நெட்டிலைப்பாய் பிள்ளை யாரின் திருப்பாத கமலங்களை வைத்தியலிங்கச் சட்டம்பியாரின் ஆத்மா சென்றடைவதாக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கோண்டாவில்**

**செல்லப்பா நடராசா**
**தலைவர்,**
**பரிபாலன சபை,**
**நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவில்.**

# செயற்றிறன் மிக்க அதிபர்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் ஒருவராகிவிட்ட அமரர் கந்தர் வைத்தியலிங்கம் அவர்களை ஒரு செயற்றிறன் மிக்க அதிபராகவே நான் அறிவேன். நமது அதிபர் காலப்பணியில் எமது பாடசாலையின் வளர்ச்சியில் அக்கறையும் விடாமுயற்சியும். தன்னம்பிக்கையும் கொண்டு அயராது பாடுபட்டவர். அதற்குச் சாட்சியாகப் பாடசாலையின் பௌதிக வளங்கள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

நூற்றாண்டுகளுக்கு மேலாகப் பழமை வாய்ந்த இப்பாடசாலையின் வரலாற்றில் அமரர் பதினைந்து வருடங்களாக அதிபராகப் பணிபுரிந்துள்ளார். பாடசாலை அரசவுடைமை யாக்கப்பட்டதும் இவரது காலத்திலேயேயாகும். பாடசாலைக்கென ஒரு புதிய நிரந்தரக் கட்டடத்தை அமைப்பதிலும் பாடசாலைக்கென ஒரு கிணற்றை அமைப்பதிலும் அயராது பாடுபட்டு வெற்றி கண்டவர்.

'நெருநலுள னொருவனின்றில்லை யென்னும்
பெருமையுடைத்து இவ்வுலகு'

உலக வாழ்வு நிலையற்றது. இம்மாய வாழ்வுதனில் பிறந்தோம். வாழ்ந்தோம். மடிந்தோம் என்றில்லாமல் தமது நினைவுகளை இம்மண்ணில் பதித்துச் சென்றாரே என்றும் எல்லோர் மனதிலும் வாழ்கின்றவராவார். அந்த வகையில் தமது அரிய செயலாலும் சிந்தனையாலும் தமது அடிச்சுவட்டைப் பதித்துச் சென்றவரே அமரர் அவர்கள். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**திரு. ஐ. விஜயகாந்தன்**
**அதிபர்**
**யா/ உடுவில் மான்ஸ் தமிழ்க் கலவன் பாடசாலை**

# எனது நல்லாசான் அமரர் வைத்தியலிங்கம்

- நல்ல ஒரு குரு.
- கூட்டுறவின் ஒரு முன்னோடி
- ஆலயத்தொண்டில் பற்றாளன்
- சமூக நீதியாளன்

1952 ஆம் ஆண்டு காலப்பகுதியில் உடுவில் மான்ஸ் ஆங்கிலப் பாடசாலையில் தமிழ் ஆசிரியராக அமரர் வைத்தியலிங்கம் பணிபுரிந்த வேளை நான் அப்பாடசாலையில் அவரிடம் தமிழ் கற்றேன். நல்ல ஒரு ஆசானாக அவர் திகழ்ந்தார். ஆசிரிய கோலமும், பண்பும் அவரிடம் மிகுந்து காணப்பட்டமையால் சகல மாணவர்களும் அன்னாருடன் அன்பு கொண்டனர். அவர் எல்லோரையும் தனது பிள்ளைகள் போல் அரவணைத்து நடந்து கொண்டார். நான் உரும்பிராய் இந்துக் கல்லூரிக்கு மாறியதும் அப்பாக்கியத்தினை இழந்தேன்.

இணுவில் மஞ்சத்தடி பகுதியினை பிறந்த இடமாகவும், வாழ்விடமாகவும் கொண்டதனால் மஞ்சத்தடிப் பகுதிக்கு ஒரு கூட்டுறவுச் சங்கம் அமைக்க வேண்டும் என பலர் முயன்றபொழுது அவர்களுக்கு ஒரு முன்னோடியாக இருந்தது. மட்டுமல்லாமல் யாழ். பல. நோ. கூ சங்க சமாசம் நெறியாளர் குழுவிலும் நல்லூர் பல நோ. கூ. சங்க நெறியாளர் குழுவிலும் ஒருவராக இருந்து அரும்பணி ஆற்றினார்.

மஞ்சத்தடி ஆலயம் பல ஆண்டுகளாக உற்சவங்கள் நடைபெறாது கோயில் மண்டபங்கள் பழுதடைந்து இருந்ததனைக் கண்டு மனம் பொறுக்காது அயலவர்களையும் அயலில் உள்ள பொது ஸ்தாபனங்களையும் ஒன்று திரட்டி ஆலயத்தைப் புனரமைக்க பெரும் உதவியாக இருந்தார்.

ஊர் மக்களிடையில் ஏதும் பிணக்குகள் நேருங்கால் தானாக விரைந்து சென்று நல்லாலோசனை கூறி அவர்களை ஒன்று சேர்த்து வைப்பார்.

பிறப்புண்டேல் இறப்பும் உண்டு என்பது இறைவனது நியதியாக இருந்தாலும் நல்ல ஒரு குருவை, நல்ல ஒரு கூட்டுறவாளனை, நல்ல ஒரு சமயத் தொண்டனை, நல்ல ஒரு சமாதானப் பிரியனை எமது பகுதி மக்கள் இழந்துள்ளது. பெரும் அதிர்ச்சியையும் ஆறாத்துயரினையும் தருகின்றது.

நல்ல ஒரு தலைவனை இழந்துள்ள துணைவியாருக்கும் பிள்ளைகளுக்கும் எவ்வண்ணம் ஆறுதல் கூறுவது என்று தெரியவில்லை.

இருந்தும் அவர்கள் அடைந்த துன்பத்தில் நானும் எமது பகுதி மக்களும், கூட்டுறவாளர்களும் பங்குகொண்டு எமது இதய அஞ்சலியை அமரருக்குச் செலுத்துகின்றோம்.

அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல எம்பெருமானை வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**தலைவர்- நல்லூர் ப.நோ.கூ.சங்கம்,**
**செயலாளர்- இணுவில் மஞ்சத்தடி,**
**அருணகிரிநாத சுப்பிரமணியர்,**
**திருக்கோவில்.**

**பெ. கனகசபாபதி**
**மஞ்சத்தடி,**
**இணுவில்.**

# இணுவில் ஓய்வுபெற்ற கல்லூரி அதிபர் அமரர் க. வைத்தியலிங்கம் பற்றிய திதி வெண்பா

பாரினிய தாரணமில் பங்குனியீர் பத்திரண்டில்
சேரபரம் நல்தசமி திங்கள நாள் - நேரோணம
சித்தி விநாயகன்றாள் சிந்தித்தே வைத்தியலிங்கம்
முத்தி நிலையடைந்தார் முன்.

**அவரின் வாழ்வுச் சீர்**

1. திருநிறைந்த இணுவையூர் கோயில் கொண்ட
சிவகாமி யம்மையே குலதெய் வமாய்
ஒருபெரிய மஞ்சத்தடி உவந்து வாழ்ந்த
ஒப்பிலாக் கந்தருடன் அவர்ம னைவி
திருவனைய ஆனந்திப் பிள்ளை பெற்ற
சிறப்புடைய பிள்ளைகளில் ஒருவராகி
குருமுறையே ஆசிரியச் சேவை செய்து
கோமகன்போல் வைத்தியலிங்கம் குலாவி நின்றார்.

2. பெற்றதாய் சகோதரரின் பெருவி ருப்பால்
பெருமைசேர் வைத்தியலிங்கம் தென்னி ணுவை
உற்றபிள்ளை யாரன்பர் செல்லப் பாவும்
உவந்தமனை நாகமுத்தும் ஒன்றாய்ப் பெற்ற
நற்புதல்வி மூத்தமகள் பூமணியை
நல்லவையில் மங்கலநாண் பூட்டி யேற்று
அற்புதமா யதன்பயனால் இருமைந் தரை
ஆனைமுக னருளினால் பெற்றெடுத்தார்.

3. பிறந்தவிடம் புகுந்தவிடம் பேண வாழ்ந்தும்
பேரூரா மிணுவையூர் போற்று மாறு
சிறந்ததாம் உடுவில் மான்ஸ் பள்ளிதன்னில்
சேர்ந்து அதன் அதிபராய் சேவை செய்தும்
நிறைந்த பொதுத் தொண்டதனால் சமாதா னத்தின்
நீதிபதிப் பட்டம்வர வேண்டா மென்று
துறந்ததனால் ஏடெல்லாம் புகழ்ந்தெ முதுஞ்
சேர்பொருளாய் வைத்தியலிங்கம் உயர்ந்து நின்றார்.

4. எண்பத்தேழு வயதடைந்த வைத்திய லிங்கம்
இருக்கும்வரை சுற்றத்துடன் குழைந்து வாழ்ந்தும்
பண்புடைய மக்களுக்கு மணஞ்செய் வித்தும்
பாசமாய் மருகிமார் பேரர் யாரும்
கண்கொள்ளப் பார்த்து மகிழ்ந் தன்பாயுள்ள
காதல்மனை யாளுடனே ஊர்ம றந்து
விண்கொண்ட விமலனடி தொண்டு செய்ய
மேதினியை நீத்தகன்றார் மேவி சாந்தி.

**அருமை அண்ணன்**
**முதுபெரும் புலவர் கலாபூஷணம்**
**ஆசிரியர் - வை. க. சிற்றம்பலம்.**



# எமது உள்ளங்களில் உறைந்த உத்தமர் அமரர் திரு. க.வைத்திலிங்கம் ஆசிரியர்

"பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்பது வள்ளுவர் வாக்கு. பண்புடையார் வாழ்வதினாலேயே இன்று உலகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. இந்தவகையில் நாமின்று பண்புடையார் ஒருவரை இழந்து நிற்கிறோம். நல்லன கற்று, நல்லன பேசி, நல்லன செய்து, நலமுற வாழ்ந்து நயம்படப் பிறரையும் வாழவைத்த உத்தமர் அமரர் திரு. க. வைத்தியலிங்கம் ஆசிரியர் அவர்கள்.

இவர் சிறந்த சமய, சமூகத் தொண்டனாக சிறந்த சமாதான நீதவானாக, சிறந்த பொதுநலவாதியாக, உத்தம உபாத்தியாயராக, தலைமை உபாத்தியாயராக, சிறந்த இல்லற ஞானியாக வாழ்ந்தவர். தான் வாழ்ந்தால் மட்டும் போதும், நானும் எனது குடும்பமும் என்று அவர் வாழ்ந்ததில்லை. பிறரையும் வாழ வைத்தவர். இணுவிலிலே பிறந்து, தன் குடும்பச் சூழல் மட்டுமன்றித் தான் பிறந்த மண்ணுக்காகவும் சேவை செய்தவர்.

ஆலயத்திலும் சரி, ஊரிலுள்ள எந்த ஒரு பிணக்குகளையும் சட்டநுணுக்கத்தினாலும் தனக்கு இயல்பாக அமைந்த பேச்சு வன்மையாலும் சாதுரியத்தினாலும் சிறந்த அணுகுமுறையாலும் தீர்த்து வைத்து விடுவார். சரியைச் சரியென்றும், பிழையைப் பிழையென்றும் துணிச்சலுடனும், வீரத்துடனும் எடுத்துக் கூறுவார். இவரது எடுப்பான தோற்றமும் மிடுக்கான நடையும், துகில்வெள்ளை ஆடையும், நீண்ட சால்வையும், நெற்றியிலே விபூதிப் பூச்சும் இவரது அகத்தூய்மையை எடுத்துக் காட்டும். இவரது உறுதியான தெளிவான பேச்சும்,செயலும் இவரை உலகியலில் கர்மவீரன் எனக் காட்டுவது போல், இவரது

மறுபக்கம் அன்பு, இரக்கம், கருணை, அறம், ஆத்மீகச் சிந்தனையும் சாதனையும் இவரை ஆத்மீக வாதியாகக் காட்டும்.

இத்தகைய அமரர் வைத்தியலிங்கம் இளமையில் இருந்தே மாதா, பிதா, குரு தெய்வ வழிபாடுடையவராக வாழ்ந்து, ஊழ்வினைப் பயனால் மனைத்தக்க மனையாளாகப் பூமணியைத் திருமணம் செய்தவர். இல்லறத்தை நல்லறமாகப் பேணியவர். இவரது சிறப்புக்களுக்கெல்லாம் ஒத்துழைத்து அன்பகலா வாழ்வு வாழ்ந்து வந்தவர் திருமதி வைத்தியலிங்கம் பூமணி "புகழ் புரிந்த இல்லிலோர்க்கில்லை. இகழ்வார் முன் ஏறுபோல் பீடுநடை" என்ற வாசகத்திற்கேற்ப இவரது பீடு நடைக்கு ஆதாரமாக உந்துசக்தியாக இருந்தவர் இவரது மனைவியார். இவரது ஆதரவினால் இவர் பல நற்கருமங்களை ஆற்றியுள்ளார்.

எனது தந்தையார் திருமதி வைத்தியலிங்கத்தின் தாய் மாமன். இவர் வைத்தியலிங்கம் அவர்களிடம் மிகுந்த அன்பும் மதிப்பும் நம்பிக்கையுமுடையவர். என்னையும் எனது சகோதரர் இருவரது வாழ்க்கைப் பொறுப்புக்களையும் எனது தந்தையார் தான் இல்லாத காலத்தில் திரு. வைத்தியலிங்கம் தம்பதிகளிடம் ஒப்படைத்துச் சென்றார். எனது தந்தையாரின் வார்த்தைக்கு மதிப்புக் கொடுத்து எமது பொறுப்புக்களை ஏற்று, எம்மை வழி நடத்தி தந்தையாகத் தாயாக இருந்து எமக்கு நல்ல வாழ்க்கை அமைத்துக் கொடுத்து இற்றைவரை அன்பு காட்டி வளர்த்த உத்தமரை இன்று நாம் இழந்துவிட்டோம். என் றும் அவர் எமது உள்ளங்களில் நிறைந்துள்ளார். அவருக்கு நாம் என்றும் நன்றியுள்ளவர்கள்.

இயல்பாகவே மூப்பும், பிணியும் சாக்காடும் அவரை ஆட்கொண்டது. மூப்பும் பிணியும் வந்தபோதும் அவரது உள்ளம்

ஆத்மீக நாட்டத்தில் திளைத்திருந்தது. அதனால் அவர் துன்பப்படவில்லை. தாம் அருமையாகப் பெற்ற பிள்ளைகளில் ஒருவர் இலங்கை வங்கி உயர் பதவியிலும் ஒருவர் வெளிநாட்டிலும் வேலை செய்கின்றனர். தந்தையைப் போலவே நல்லுபகாரிகளாக, நற்சிந்தனையாளர்களாக நல்வழிகாட்டிகளாகப் பிள்ளைகளும் விளங்குகிறார்கள். இவரது பேரப்பிள்ளைகளும், மருமக்களும் நல்லபிள்ளைகளாக அமைந்துள்ளனர். எண்பத்து ஏழுவருடங்கள் நிறைவாழ்வு வாழ்ந்து இறைவன் பாதார விந்தங்களை அடைந்த அமரருக்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதோடு அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

**எமது குடும்பத்தின் சார்பில்**
**ஆசிரியை, திருமதி. வை. கணேசபிள்ளை,**
**இணுவில் தெற்கு.**

*இந்த உலகில் எப்படியும் வாழ்ந்தேயாக வேண்டும் என்ற அளவுக்கு இங்கே இன்பங்கள் கலந்துள்ளன. இதைப் போலவே, உடனடியாய் மடிந்தேயாக வேண்டும் என்னும் அளவுக்குத் துன்பங்களும் நிறைந்துள்ளன. —ஓர் லிங்கன்

*பலரைச் சில காலமும், சிலரைப் பல காலமும் ஏமாற்றலாம் – ஆபிரகாம் லிங்கம்

* ஒரு போதும் நன்மை பேசுவதைவிட பேசாமல் இருப்பதே மிக்க பயனை அளிப்பதாம். – காந்தியடிகள்

ஔவையார் அருளிச் செய்த

# மூதுரை

### கடவுள் வாழ்த்து

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக்கு உண்டாம் மேனி நுடங்காது - பூக்கொண்டு
துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந் நன்றி
'என்று தருங் கொல்? 'என வேண்டா - நின்று
தளரா வளர் தெங்கு தாள் உண்ட நீரைத்
தலையாலே தான் தருதலால்

நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல் மேல் எழுத்துப் போல் காணுமே - அல்லாத
ஈரமிலா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர் மேல் எழுத்துக்கு நேர்

இன்னா இளமை வறுமை வந்து எய்தியக் கால்
இன்னா அளவில் இனியவும் - இன்னாத
நாள் அல்லா நாள் பூத்த நன் மலரும் போலுமே
ஆள் இல்லா மங்கைக்கு அழகு

அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பு அல்லார் நண்பு அல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன் மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும்

அடுத்து முயன்றாலும் ஆகும் நாள் அன்றி
எடுத்த கருமங்கள் ஆகா - தொடுத்த

உருவத்தால் நீண்ட உயர்மரங்கள் எல்லாம்
பருவத்தால் அன்றிப் பழா

உற்ற இடத்தில் உயிர் வழங்கும் தன்மையோர்
பற்றலரைக் கண்டால் பணிவரோ? - கல்தூண்
பிளந்து இறுவது அல்லால் பெரும் பாரம் தாங்கின்
தளர்ந்து விளையுமோ தான்

நீர் அளவே ஆகுமாம் நீர் ஆமபல்; தான் கற்ற
நூல் அளவே ஆகுமாம் நுண் அறிவு - மேலைத்
தவத்து அளவே ஆகுமாம் தான் பெற்ற செல்வம்
குலத்து அளவே ஆகும் குணம்

நல்லாரைக் காண்பதுவும் நன்றே; நலம்மிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே; நல்லார்
குணங்கள் உரைப்பதுவும் நன்றே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் நன்று

தீயாரைக் காண்பதுவும் தீதே; திரு அற்ற
தீயார் சொல் கேட்பதுவும் தீதே - தீயார்
குணங்கள் உரைப்பதுவும் தீதே; அவரோடு
இணங்கி இருப்பதுவும் தீது

நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை

பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்
விண்டு உமிபோனால் முளையாதாம் - கொண்ட பேர்

ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவு இன்றி
ஏற்ற கருமம் செயல்

மடல் பெரிது தழை; மகிழ் இனிது கந்தம்
உடல் சிறியர் என்று இருக்க வேண்டா - கடல்பெரிது
மண்ணீரும் ஆகாது; அதன் அருகே சிற்றூறல்
உண்ணீரும் ஆகி விடும்

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்கும்
அவையல்ல நல்ல மரங்கள் - சபை நடுவே
நீட்டு ஓலை வாசியா நின்றான் குறிப்பு அறிய
மாட்டாதவன் நன் மரம்

கான மயில் ஆடக் கண்டிருந்த வான் கோழி
தானும் அதுவாகப் பாவித்து - தானும் தன்
பொல்லாச் சிறகை விரித்து ஆடினால் போலுமே
கல்லாதான் கற்ற கவி

வேங்கை வரிப்புலி நோய் தீர்த்த விடகாரி
ஆங்கு அதனுக்கு ஆகாரம் ஆனால்போல் - பாங்கு அழியாப்
புல் அறிவாளருக்குச் செய்த உபகாரம்
கல்லின் மேல் இட்ட கலம்

அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா - மடைத் தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வரும் அளவும்
வாடி இருக்குமாம் கொக்கு

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவு அல்லர்; - அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறவார் உறவு

சீரியர் கெட்டாலும் சீரியரே; சீரியர் மற்று
அல்லாதார் கெட்டால் அங்கு என்னாகும்? – சீரிய
பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும், என் ஆகும்
மண்ணின் குடம் உடைந்தக் கால்?

ஆழ அமுக்கி முகக்கினும் ஆழ்கடல் நீர்
நாழி முகவாது நானாழி - தோழி
நிதியும் கணவனும் நேர் படினும் தம்தம்
விதியின் பயனே பயன்

உடன் பிறந்தார் சுற்றத்தார் என்று இருக்கவேண்டா
உடன் பிறந்தே கொல்லும் வியாதி - உடன் பிறவா
மாமலையில் உள்ள மருந்தே பிணி தீர்க்கும்
அம் மருந்து போல் வாரும் உண்டு

இல்லாள்அகத்து இருக்க இல்லாதது ஒன்று இல்லை
இல்லாளும் இல்லாளே ஆமாயின் - இல்லாள்
வலி கிடந்த மாற்றம் உரைக்குமேல் அவ்இல்
புலி கிடந்த தூறாய் விடும்.

எழுதியவாறே தான் இரங்கும் மட நெஞ்சே !
கருதியவாறு ஆமோ கருமம்? - கருதிப் போய்க்
கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக் காஞ்சிரங்காய் ஈந்ததேல்
முற்பாவத்தில் செய்த வினை.

கற்பிளவோடு ஒப்பர் கயவர் ; கடும் சினத்துப்
பொற் பிளவோடு ஒப்பாரும் போல்வாரே - வில் பிடித்து
நீர் கிழிய எய்த விடுப் போல மாறுமே
சீர் ஒழுகு சான்றோர் சினம்

நற்றாமரைக் கயத்தில் நல் அன்னம் சேர்ந்தாற் போல்
கற்றாரைக் கற்றாரே காமுறுவர் - கற்பிலா

மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டில்
காக்கை உகக்கும் பிணம்

நஞ்சு உடைமை தான் அறிந்து நாகம் கரந்து உறையும்
அஞ்சாப் புறம் கிடக்கும் நீர்ப் பாம்பு - நெஞ்சில்
கரவுடையார் தம்மைக் கரப்பர் கரவார்
கரவிலா நெஞ்சத் தவர்

மன்னனும் மாசு அறக் கற்றோனும் சீர் தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்பு உடையன் - மன்னர்க்குத்
தன் தேசம் அல்லால் சிறப்பு இல்லை கற்றோர்க்குச்
சென்ற இடம் எல்லாம் சிறப்பு

கல்லாத மாந்தர்க்குக் கற்று உணர்ந்தார் சொல் கூற்றம்
அல்லாத மாந்தர்க்கு அறம் கூற்றம் - மெல்லிய
வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம் கூற்றமே
இல்லிற்கு இசைந்து ஒழுகாப் பெண்

சந்தன மென்குறடு தான் தேய்ந்த காலத்தும்
கந்தம் குறை படாது; ஆதலால் - தம்தம்
தனம் சிறியர் ஆயினும் தார் வேந்தர் கேட்டால்
மனம் சிறியர் ஆவரோ மற்று?

மருவு இனிய சுற்றமும் வான் பொருளும் நல்ல
உருவும் உயர் குலமும் எல்லாம் - திரு மடந்தை
ஆம் போது அவளோடும் ஆகும்: அவள் பிரிந்து
போம் போது அவளோடும் போம்

சாந்தனையும் தீயனவே செய்திடினும் தாம் அவரை
ஆந்தனையும் காப்பர் அறிவுடையோர் - மாந்தர்
குறைக்கும் தனையும் குளிர் நிழலைத் தந்து
மறைக்குமாம் கண்டீர் மரம்

மூதுரை முற்றும்.

ஔவையார் அருளிச் செய்த

# நல்வழி

## கடவுள் வாழ்த்து

பாலும் தெளிதேனும் பாகும் பருப்பும் இவை
நாலும் கலந்து உனக்கு நான் தருவேன் - கோலம் செய்
துங்கக் கரி முகத்துத் தூமணியே நீ எனக்குச்
சங்கத் தமிழ் மூன்றும் தா.

### நூல்

புண்ணியம் ஆம் பாவம் போம் போன நாள் செய்த அவை
மண்ணில் பிறந்தார்க்கு வைத்த பொருள் - என்னும்கால்
ஈது ஒழிய வேறு இல்லை; எச்சமயத்தார் சொல்லும்
தீது ஒழிய நன்மை செயல்

சாதி இரண்டு ஒழிய வேறு இல்லை; சாற்றும் கால்
நீதி வழுவா நெறி முறையின் - மேதினியில்
இட்டார் பெரியோர், இடாதார் இழி குலத்தோர்
பட்டாங்கில் உள்ள படி

இடும்பைக்கு இடும்பை இயல்பு உடம்பு இது அன்றே
இடும் பொய்பை மெய் என்று இராதே - இடும் கடுக
உண்டாயின் உண்டாகும் ஊழில் பெரு வலி நோய்
விண்டாரைக் கொண்டாடும் வீடு

எண்ணி ஒரு கருமம் யார்க்கும் செய்ய ஒண்ணாது
புண்ணியம் வந்து எய்த போது அல்லால் - கண் இல்லான்
மாங்காய் விழ எறிந்த மாத்திரை கோல் ஒக்குமே
ஆங்காலம் ஆகும் அவர்க்கு

வருந்தி அழைதத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமின் என்றால் போகா - இருந்து ஏங்கி
நெஞ்சம் புண்ணாக நெருந்தூரம் தாம் நினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்

உள்ளது ஒழிய ஒருவர்க்கு ஒருவர் சுகம்
கொள்ளக் கிடையா குவலயத்தில் வெள்ளக்
கடல் ஓடி மீண்டு கரையேறினால் என்
உடலோடு வாழும் உயிர்க்கு

எல்லாப் படியாலும் எண்ணினால் இவ் வுடம்பு
பொல்லாப் புழுமலி நோய்ப் புன்குரம்பை - நல்லார்
அறிந்திருப்பார் ஆதலினால் ஆம் கமல நீர் போல்
பிரிந்திருப்பர் பேசார் பிறர்க்கு

ஈட்டும்பொருள் முயற்சி எண்ணிறந்த ஆயினும் ஊழ்
கூட்டும்படி அன்றிக் கூடாவாம் - தேட்டம்
மரியாதை காணும் மகிதலத்தீர் கேண் மின்
தரியாது காணும் தனம்

ஆற்றுப் பெருக்கு அற்று அடிசுடும் அந்நாளும் அவ் ஆறு
ஊற்றுப் பெருக்காம் உலகு ஊட்டும் - ஏற்றவர்க்கு
நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லை என மாட்டார் இசைந்து

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ?மா நிலத்தீர் - வேண்டாம்
"நமக்கும் அது வழியே; நாம் போம் அளவும்
எமக்கு என்" இட்டு உண்டு இரும்

ஒரு நாள் உணவை ஒழி என்றால் ஒழியாய்
ஒரு நாளுக்கு ஏல் என்றால் ஏலாய் - ஒரு நாளும்
என் நோவு அறியாய் இடும்பை கூர் என் வயிறே!
உன்னோடு வாழ்தல் அரிது

ஆற்றங் கரையின் மரமும் அரசு அறிய
வீற்றிருந்த வாழ்வும் விழும் அன்றே - ஏற்றம்
உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பு இல்லை கண்டீர்
பழுது உண்டு வேறு ஓர் பணிக்கு

ஆவாரை யாரே அழிப்பார்? அது அன்றிச்
சாவாரை யாரே தவிர்ப்பவர்? ஓவாமல்
ஐயம் புகுவாரை யாரே விலக்குவார்?
மெய் அம்புலி அதன் மேல்

பிச்சைக்கு மூத்தகுடி வாழ்க்கை பேசுங்கால்
இச்சை பல சொல்லி இடித்து உண்கை - சீச்சீ
வயிறு வளர்க்கைக்கு மானம் அழியாது
உயிர் விடுகை சால உறும்

சிவாய நம என்று சிந்தித்து இருப்போர்க்கு
அபாயம் ஒரு நாளும் இல்லை - உபாயம்
இதுவே; மதியாகும்; அல்லாத எல்லாம்
விதியே மதியாய் விடும்

தண்ணீர் நில நலத்தால் தக்கோர் குணம் கொடையால்
கண் நீர்மை மாறாக் கருணையால் - பெண்ணீர்மை
கற்பு அழியா ஆற்றால்! கடல் சூழ்ந்த வையகத்துள்
அற்புதமாம் என்றே அறி

செய் தீவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக்கால்
எய்த வருமோ இரு நிதியம்? - வையத்து
அறும் பாவம் என்ன அறிந்து அன்று இடார்க்கு இன்று
வெறும் பானை பொங்குமோ மேல்!

பெற்றார் பிறந்தார் பெரு நாட்டார் பேருலகில்
உற்றார் உகந்தார் என வேண்டார் - மற்றோர்
இரணங் கொடுத்தால் இடுவர்; இடாரே
சரணம் கொடுத்தாலும் தாம்

சேவித்தும் சென்று இரந்தும் தெண் நீர்க்கடல் கடந்தும்
பாவித்தும் பாராண்படும் பாட்டு இசைத்தும் போவிப்பம்
பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்
நாழி அரிசிக்கே நாம்

அம்மி துணையாக ஆறு இழிந்தவாறு ஒக்கும்
கொம்மை முலை பகர்வார் கொண்டாட்டம் - இம்மை
மறுமைக்கும் நன்று அன்று மாநிதியம் போக்கி
வறுமைக்கு வித்தாய் விடும்

நீரும் நிழலும் நிலம் பொதியும் நெல் கட்டும்
பேரும் புகழும் பெரு வாழ்வும் - ஊரும்
வருந்திருவும் வாழ் நாளும் வஞ்சமில்லார்க்கு என்றும்
தரும் சிவந்த தாமரையாள் தான்

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைத்துக்கேடுகெட்ட
மானிடரே கேளுங்கள்; கூடு விட்டு இங்கு
ஆவிதான் போயின பின்பு யாரே அனுபவிப்பார்
பாவிகாள் அந்தப் பணம்

வேதாளம் சேரும் வெள் எருக்குப் பூக்குமே
பாதாள மூலி படருமே - மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்று ஓரம் சொன்னார் மனை

நீறு இல்லா நெற்றி பாழ்; நெய் இல்லா உண்டிபாழ்
ஆறு இல்லா ஊருக்கு அழகு பாழ் - மாறுஇல்
உடன் பிறப்பு இல்லா உடம்பு பாழ்; பாழே
மடக் கொடி இல்லா மனை

ஆன முதலில் அதிகம் செலவு ஆனால்
மானம் அழிந்து மதி கெட்டுப் - போன திசை
எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ் பிறப்பும் தீயனாய்
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு

மானம் குலம் கல்வி வண்மை அறிவுடைமை
தானம் தவம் உயர்ச்சி தாளாண்மை - தேனின்
கசி வந்த சொல்லியர் மேல் காமுறுதல் பத்தும்
பசி வந்திடப் பறந்து போம்

ஒன்றை நினைக்கின் அது ஒழிந்திட்டு ஒன்றாகும்
அன்றி அதுவரினும் வந்து எய்தும் - ஒன்றை
நினையாத முன் வந்து நிற்பினும் நிற்கும்
எனை ஆளும் ஈசன் செயல்

உண்பது நாழி உடுப்பது நான்கு முழம்
எண்பது கோடி நினைந்து எண்ணுவன - கண் புதைந்த
மாந்தர் குடி வாழ்க்கை மண்ணின் கலம் போலச்
சாந்துணையும் சஞ்சலமே தான்

மரம் பழுத்தால் வெளவாலை வாவென்று கூவி
இரந்து அழைப்பார் யாவரும் அங்கில்லை - சுரந்து அமுதம்
கற்றா தரல் போல் கரவாது அளிப்பரேல்
உற்றார் உலகத் தவர்

தாம் தாம் முன் செய்தவினை தாமே அனுபவிப்பார்
பூந்தாமரை யோன் பொறி வழியே - வேந்தே
ஒறுத்தாரை என் செயலாம் ஊரெல்லாம் ஒன்றா
வெறுத்தாலும் போமோ விதி

இழுக்கு உடைய பாட்டிற்கு இசை நன்று; சாலும்
ஒழுக்கம் உயர் குலத்தின் நன்று - வழுக்குடைய
வீரத்தின் நன்று விடாநோய்; பழிக்கு அஞ்சாத்
தாரத்தின் நன்று தனி

ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்
மாறிடும் ஏறிடும் மாநிலத்தீர் - சோறு இடும்
தண்ணீரும் வாரும் ; தருமமே சார்பாக
உண்ணீர்மை வீறும் உயர்ந்து

வெட்டனவை மெத்தனவை வெல்லாவாம்; வேழத்தில்
பட்டு உருவும் கோல் பஞ்சில் பாயாது நெட்டிருப்புப்
பாரைக்கு நெக்கு விடாப்பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்

கல்லானே ஆனாலும் கைப்பொருள் ஒன்று உண்டாயின்
எல்லோரும் சென்று அங்கு எதிர் கொள்வர் - இல்லானை
இல்லாளும் வேண்டாள்; மற்று ஈன்று எடுத்த தாய் வேண்டாள்
செல்லாது அவன் வாயிற் சொல்

பூவாதே காய்க்கும் மரமும் உளமக்கள் உளும்
ஏவாதே நின்று உணர்வார் தாம் உளரே - தூவா
விரைத்தாலும் நன்று ஆகா வித்தெனவே பேதைக்கு
உரைத்தாலும் தோன்றாது உணர்வு

நண்டு சிப்பி வேய் கதலி நாசமுறும் காலத்தில்
கொண்ட கரு அளிக்கும் கொள்கைபோல் - ஒண்தொடி
போதம் தனம் கல்வி போன்ற வரும் காலம் அயல்
மாதர் மேல் வைப்பார் மனம்

வினைப் பயனை வெல்வதற்கு வேதம் முதலாம்
அனைத்தாய நூலகத்தும் இல்லை - நினைப்பது எனக் கண்ணுறுவது
அல்லால் கவலைப் படேல் நெஞ்சேமெய்
விண் உறுவார்க்கு இல்லை விதி

நன்று என்றும் தீது என்றும் நான் என்றும் தான் என்றும்
அன்று என்றும் ஆம் என்றும் ஆகாதே - நின்ற நிலை
தானதாம் தத்துவமாம் சம்பறுத்தார் யாக்கைக்குப்
போனவா தேடும் பொருள்

முப்பதாம் ஆண்டு அளவில் மூன்றற்று ஒரு பொருளை
தப்பாமல் தன்னுள் பெறான் ஆயின் - செப்பும்
கலை அளவே ஆகுமாம் காரிகையார் தங்கள்
முலை அளவே ஆகுமாம் மூப்பு

தேவர் குறளும் திருநாள் மறை முடிவும்
மூவர் தமிழும் முனி மொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒரு வாசகம் என்று உணர்

**நல்வழி முற்றும்.**

# இயற்கை நியதி

"பிறந்தோம், வாழ்கின்றோம்..... ஒருநாள் நாமும் இறப்போம்" இதுதான் இயற்கை நியதி! அறிந்தும் மனிதா! அழுவதும் வீணே! பிறிதோர் வார்த்தை புகலுவேன் கேள் நீ. இருக்கும் காலம் சிறிது. இதனுள் பெருக்கு இன்பம். பேதமை யகற்று! அறஞ்செய், அன்பு செய். அயலாரை நேசி, மறந்தும் தீங்கை மனதில் உன்னாதே! உறக்கம் மறந்து, ஓய்வும் இன்றி பறந்து பறந்து எதைத் தேடுகிறாய் நீ? உடுக்க நல்லாடை, உண்ண உணவு, படுக்க ஓரிடம், பழுதில்லா உடம்பு இதற்கு மேல் ஆசை இதயத்திலிருந்தால் இன்னல்கள் சேரும், இழப்பாய் அமைதி! நீடு காலம் வாழ்வோம் என்று ஓடிஓடி உழைத்து நீயும் தேடிய செல்வம், சொந்தம், நட்பு கூடி வாராது நீ போகும் காலை!

- ஆதலால்.....

வாடி உள்ளம் நொந்து மெலிந்து வருத்தும் நோயால் உடலும் தளர்ந்து ஆடிய ஆட்டமும் அடங்கிடு முன்னே நாடி அடைந்திடு நாயகன் பதமே!

**சென்னை - 4,**
**இந்தியா.**

**இணுவை சுசீலா தர்மலிங்கம்**

# நன்றி நவிலல்





வையகத்தில் வரவழைத்து வாழ வைத்து, உய்ய வழி காட்டி நிதம் ஓங்குவித்து, மெய் வழியில் கல்வி கற்றுத் தொழிலுமாக்கி, மேதினியில் சிறக்க வைத்தார் எங்கள் தந்தை. அன்னவரும் அருகிருந்து வாழும் நாளில் அவன்' கணக்கை முடித்ததால் திருநாடேக, என்ன செய்வோம் எல்லாமே ஈசனது செயலென்றெண்ணி, எம்மனதைத் தேற்றி நிதம் வாழுகின்றோம். தந்தை சிவப்பதவி கொண்டார் என்ற செய்தி, சிந்தையிலே பட்டதுமே வந்து கூடி, எந்தமக்கு ஆறுதல் சொன்னோர் பல்லோர், தந்தியுடன் கடிதம் தொலைபேசி தன்னில் தம்மிரங்கல் வழங்கினோர்கள் பல்லோர் நொந்து மனங்கலங்கி அஞ்சல் செய்தோர் பல்லோர், எல்லோர்க்கும் எம்மிதய நன்றி சொல்வோம் ஏற்றிடுவீர் எமக்கென்றும் ஆசி கூறி.

நன்றி

**இங்ஙனம்**

**திருமதி.பூமணி வைத்தியலிங்கம்**
**வை.ஸ்ரீஸ்கந்தவரோதயன்**
**குடும்பத்தினர்,**
**வை.ஸ்ரீ இராசவரோதயன்**
**குடும்பத்தினர்.**

**"ஸ்ரீ வாசம்"**
**துரைவீதி,**
**இணுவில் தெற்கு,**
**கோண்டாவில்.**



# கீதாசாரம்



எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கின்றதோ அது நன்றாகவே நடக்கின்றது
எது நடக்க இருக்கின்றதோ அதுவும்
நன்றாக நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக அழுகின்றாய்?
எதை நீ கொண்டு வந்தாய்
அதை நீ இழப்பதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கேயே கொடுக்கப்பட்டுள்ளது
எது இன்று உன்னுடையதோ அது
நாளை மற்றொருவருடையாதாகின்றது
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்.

-பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்-



Printed By: Harikanan Printers Jaffna, T.P:021-222 2717,4590123